மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லும்போது விவாதத்தில் பேசுவதுபோல் பேசக்கூடாது.

இருளில் கிடந்த தமிழகத்தை மீட்டெடுக்க அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின் உற்பத்தியைப் பெருக்க துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் மிகக் குறைந்த செலவில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடுதல் மின் உற்பத்தியைச் செய்திட Super Critical தொழில்நுட்பத்துடன்கூடிய எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம், திரவ இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்தி, உடன்குடி விரிவாக்க அனல் மின் திட்டம் போன்ற திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அவை உறுப்பினர்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வருங்காலத்தில் தமிழ்நாடு, மின் உற்பத்தியில் மிகை மாநிலமாக, மற்ற மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கும் மாநிலமாகத் திகழும் என்பதில் மாறுபட்ட கருத்து நிச்சயமாக இருக்க முடியாது. அவை உறுப்பினர்கள் அனைவரின் சார்பில் அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

4. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் காலையில்தான் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதைத் துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வரட்டும். தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் காலையில்தான் கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) காலையில்தான் என்னுடைய அறைக்கு வந்து கொடுத்தீர்கள். துறைக்கு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன்.

5. முன்பண மானியக் கோரிக்கைகள், 2012–2013, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012-2013 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.